## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2015

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 432) 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 6 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் ஐந்தொகை, வருமானச் செலவினக் கணக்கு என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமேல், தெற்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வடக்கு போன்ற மாகாணங்களின் பங்களிப்புப் பணம், நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிராததுடன் அவை பெறவேண்டிய பங்களிப்புப் பணமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பணம், ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பிலிருந்து செலுத்தப்படுவதுடன் அச் செலவினங்களை இனங்கண்டு நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

2015 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 46,826,453 தொகையான பணம் ஆசிரியர்களின் விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் அல்லது பங்களிப்பு ஓய்வூதியம் என்பவற்றில் எதிலிருந்து பங்களிப்புப் பணம் கிடைத்தது என குறிப்பாக கண்டறியக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விதிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 9(அ) | ஒவ்வொரு உதவிப்பணம் செலுத்துபவர்களினதும், அரசாங்கத்தால் நிதியத்திற்காகச் செலுத்தப்பட்ட சகல உதவிப்பணங்கள் மற்றும் உதவிப்பணம் செலுத்துபவர்களின் இறப்பின் போது அவருக்குச் செலுத்தவேண்டியதாகக் காணப்பட்ட உதவிப்பணம் என்பன தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படவேண்டிய போதிலும் அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04.1 (அ) பந்தி | வருடாந்த பாதீடு விடயப்பொறுப்பு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப் பிரமாணம் 205 | வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதல் இரு தடவைகள் செலுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதல் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் |

பங்களிப்புப் பணம் மீளச் செலுத்துதல் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 89,644,498 மிகையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 120,273,433 ஆக இருந்ததமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 30,628,935 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் பங்களிப்புப்பணத்தை மீளச் செலுத்துதல் ரூபா 4,997,283 ஆல் அதாவது 58 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த போதிலும், பங்களிப்புப்பணப் பெறுவனவு ரூபா 26,817,769 ஆல் அதாவது 35 சதவீதத்தால் குறைவடைந்தமையும் வட்டி வருமானம் ரூபா 7,224,896 ஆல் அதாவது 14 சதவீதத்தால் குறைவடைந்தமையும் மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் அடிப்படையிலும் இந்த நிதி விளைவுகளில் வேறுபாடு ஏற்படலாம்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புப்பணத்தின் மூலம் நிதியமொன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் மேற்படி செலவினத்தை மேற்கொண்டதன் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை, மீளாய்வாண்டில் புதிய அங்கத்துவத்தைப் பெற்றவர்களின் எண்ணிக்கை, நிதியத்தின் அங்கத்துவத்திலிருந்து அகற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அங்கத்தவர்களின் பெயர், பாடசாலைகளை உள்ளடக்கிய பட்டோலை பேணப்படாதிருந்தமையால் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய பணம், பெறப்பட்ட பணம் மற்றும் நிலுவைப் பணம் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 70 பாடசாலைகளிலிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்புப்பணம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பங்களிப்புப்பணம் மீளச் செலுத்தும் போது பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத் தொகையை வரலாற்றுத்தாளைப் பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அந்தப் பணம் சரியாக நிதியத்திற்குக் கிடைத்ததா என பரீட்சிப்பதற்கான முறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டு ரீதியான கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பிரதான செயற்பணியான ஆசிரியர்களின் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் செலவினம், பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் பங்களிப்புப்பண பெறுவனவு, பங்களிப்புப் பணம் மீளச் செலுத்துதல் மற்றும் முதலீட்டின் அடிப்படையில் வரிகளை செலுத்துதல் என்ற விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே முறையே 44 சதவீதம், 52 சதவீதம் மற்றும் 29 சதவீதம் என முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்மான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமை மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிதியத்தின் செயற்படு நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை. |
| (ஆ) | அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளைப் பேணுதல் | அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிருக்காமை. |
| (இ) | பங்களிப்புப்பண முகாமைத்துவம் | ஆசிரியர்கள் ஓய்வூதிய நிதியத்திற்குரிய பங்களிப்புப்பணம் மற்றும் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் பங்களிப்புப்பணம் என்பவற்றை தனித்தனியாக இனங்கண்டு இந்த நிதியத்திற்குரிய பங்களிப்புப்பணம் கணக்கீடு செய்யப்படாமை. |